1981 ஏப்ரல் 9]

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலேயிருந்தும், காஞ்சீபுரத்திலேயிருந்தும் பெங்களூருக்குச் செல்லும் வண்டிகள் குடியாத்தம் மார்க்கமாக செல்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பார்த்து, அந்த வழித்தடத்தைப் பார்த்த பின்னர்தான் அதைப்பற்றி முடிவு சொல்ல முடியும்.

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத் தலைமை அலுவலகம்

*வினா எண். 724—திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக தலைமையிடம் திருச்சிக்கு மாற்றுவதற்கு அரசிடம் திட்டமுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ) : ஆம். இது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. த. ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத் தலைமையிடத்தைத் திருச்சிக்கு மாற்றுவதற்கு எப்பொழுது அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது? எப்பொழுது ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவரவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் இன்னும் கொஞ்சம் அதிகமான பேருந்துகள் வந்த பின்பு திருச்சிக்குக் கொண்டு போகும்பொழுது பணிமனைகள் விரிவாக்கப்பட வேண்டும். இதற்கான ஏற்பாடுகளைச் செய்த பின்பு அதைப் பற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. த. ஆறுமுகம் : தலைவரவர்களே, திருச்சியில் பணிமனை கட்டுவதற்கான இடம் வாங்கப்பட்டுள்ளதா? எவ்வளவு இடம் வாங்கப்பட்டுள்ளது? எப்பொழுது வேலை துவங்கப்படும் என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவரவர்களே, திருச்சியிலே இடம் எவ்வளவு வாங்கப்பட்டிருக்கிறது என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால், அங்கே இதை மாற்ற வேண்டுமென்ற கருத்து மட்டும்தான் வந்திருக்கிறது. என்னென்ன

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றி இனிமேல்தான் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஏறத்தாழ 443 பேருந்துகள் இருக்கின்றன ; 135 பேருந்துகள், சென்னையில் இருப்பதால் அதை மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் பொழுது திருச்சியிலே அதிகமான பேருந்துகள் இயக்கப்பட வேண்டும். அப்படிப்பட்ட முறை ஏற்பட்ட பின்னர்தான் அதை மாற்றுவதற்கான காரியங்களைக் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாநிலத் தலைநகரத்தைத் திருச்சிக்கு மாற்றிய பிறகு இது மாற்றப்படுமா அல்லது அதற்கு முன்பே இது மாற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதற்கோ முடிச்சுப் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். போக்குவரத்துக் கழகங்கள் தனி என்பதைத் தயவு செய்து மறந்து விட வேண்டாம்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவரவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின், தலைமையிடத்தைத் திருச்சிக்கு மாற்றுவதற்கான குறிப்பு இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அவ்வாறு மாற்றுவதற்கான காரணம் என்ன ? அதன் மூலம் கிடைக்கும் பலன் என்ன என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவரவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையில் தமிழகம் பூராவும் நாம் இயக்குகிறோம். மற்றப் போக்குவரத்துக் கழகங்கள் சில குறிப்பிட்ட மாவட்டங்களில்தான் இயங்குகின்றன. ஆனால், தமிழ்நாடு முழுவதும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மத்திய இடமாக திருச்சி வருகிறது. எனவேதான், அங்கே கொண்டு வர வேண்டுமென்ற உணர்வைத் தெரிவித்திருக்கிறார்கள். அதில் எத்தனையோ பிரச்சினைகள் இருக்கின்றன ; அவைகளையெல்லாம் ஆய்ந்து கொண்டிருக்கிறோம். எனவே, முழுவதையும் இப்பொழுதே சொல்லிவிட முடியாது. ஆராய்ந்த பிறகு, உங்களுக்குச் சொல்லிவிட்டுத்தான் நிச்சயமாக மாற்றுவோம்.

திரு. இ. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத் தலைமையிடத்தைச் சேலத்திற்கு மாற்றுவதற்கு அரசு முயற்சியெடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்?

1981 ஏப்ரல் 9]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் இடைப்பாடி என்று கேட்கவில்லை, அதைப் பொறுத்த வரையில் சந்தோஷப்படு கிறேன். சேலம் ஒரு ஓரமாகப் போய் விட்டது. மத்தியிலே உள்ள இடமாக வர வேண்டுமென்றுதான் திருச்சியைப்பற்றி எடுக்கப்பட்டிருக்கிறது. தனிப்பட்ட எந்த நோக்கத்தோடும் அது எடுக்கப்படவில்லை.

சின்னாளப்பட்டியில் கைத்தறித் துணிகள் விற்பனை.

*வினா எண். 725—திரு. ஆ. வெள்ளைச்சாமி: மாண்புமிகு கைத்தறி கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) மதுரை மாவட்டம் சின்னாளப்பட்டியில் கைத்தறித் துணிகள் விற்பனைத் தேக்கத்தினால் நெசவாளர்கள் பாதிக் கப்பட்டுள்ளது பற்றி கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் இது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: (அ) ஆம்.

(ஆ) சின்னாளப்பட்டிப் பகுதியில் தேங்கியிருந்த கைத்தறித் துணிகளை கொள்முதல் செய்ய 1980 ஆம் ஆண்டு செப் டம்பர் திங்கள் 25 ஆம் நாள் அன்று நடவடிக்கை எடுக்கப்பட்டது. தீபாவளி மற்றும் பொங்கல் சிறப்புத் தள்ளுபடி மானியத்தைப் பயன்படுத்தி சுமார் ரூபாய் 27 இலட்சம் மதிப்புள்ள துணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, தீபாவளி நேரத்தில் விற்பனை செய்தது போக தற் பொழுது மிகவும் அதிகமான துணிகள் தேக்கமாக இருப்பதால் அங்கேயுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல முறையிலே செயல்பட முடியாமல், அங்கேயுள்ள நெசவாளர்களுக்கு இன் றைக்கு வேலை கொடுக்க முடியாமல் இருக்கிறது. இதனால் அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதைப் போக்கு வதற்கு தற்பொழுது என்ன திட்டத்தை அரசு எடுத்து வருகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தற்போது அதிக விற்பனையாகும் பாலிஸ்டர் ரகம், கோடம்பாக்கம் சேலைகள், ஸ்பன் சேலைகள் மற்றும் கைலிகள் ஆகியவை அதிகமாக விற்பனையாகிக் கொண் டிருக்கிறது. சின்னாளப்பட்டியில் தயாரிக்கப்பட்டு வருகின்ற